20.07.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மேட்டூர் அணை: நீர்மட்டம் உயர்வு

காவிரியின் நீர் பிடிப்புப் பகுதிகளில் பெய்துவரும் மழையின் காரணமாக, மேட்டூர் அணையின் நீர்மட்டம் 5.27 அடி உயர்ந்துள்ளது.

நீர்வரத்து காரணமாக அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை காலை 52.80 அடியாக உயர்ந்தது. தண்ணீர்வரத்து நொடிக்கு 8,991 கன அடி. குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 2 ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்கப்பட்டிருந்தது. நீர் இருப்பு 19.62 டி.எம்.சி. கடந்த 5 நாள்களில் மட்டும் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 5.27 அடி உயர்ந்துள்ளது.

### திருவள்ளூரில் 22-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம், ஜூலை 22-ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 11 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற உள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எ.சுந்தரவல்லி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: திருவள்ளூர் மாவட்ட மாதாந்திர விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. கூட்டத்தில், வேளாண்மை, தோட்டக் கலை, வருவாய், வேளாண்மை பொறியியல், மீன் வளம், கால்நடை பராமரிப்பு, வேளாண் விற்பனை, வணிகம் உள்பட மாவட்டத்தில் உள்ள அனைத்துத் துறை அதிகாரிகளும் கலந்து கொண்டு, விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர்.

மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் தவறாமல் இக்கூட்டத்தில் பங்கேற்று பயன்பெறலாம்.

## உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 140 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

ஊத்துக்கோட்டையில், உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 140 பயனாளிகளுக்கு ரூ.20.72 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில், முதல்வரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா அண்மையில் நடைபெற்றது. இதில், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி, மாவட்ட ஆட்சியர் ஏ.சுந்தரவல்லி பேசியதாவது:

"அம்மா' திட்ட முகாமில், இணையதளம் வழியாக பட்டா மாறுதல், ஜாதிச் சான்று, வருமானச் சான்று உள்ளிட்டவை உடனடியாக வழங்கப்படுகின்றன. மேலும், அரசு பொது இ-சேவை மையம் மூலமாகவும் இதுபோன்ற சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், வழங்கப்படும் அனைத்து உதவிகளையும் பெற்று பயனடையவேண்டும் என்றார்.

இவ்விழாவில் திருமண உதவித்தொகையாக 22 பேருக்கு ரூ.1.82 லட்சம், இயற்கை மரணமடைந்த 57 பேரின் குடும்பத்தினருக்கு ரூ.6.32 லட்சமும், 29 பேருக்கு முதியோர் உதவித்தொகை, இயற்கை இடர்பாடுகளால் இறந்த 4 பேரின் குடும்பத்தினருக்கு ரூ.12 லட்சம் என மொத்தம் 140 பேருக்கு ரூ.22.72 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

விழாவுக்கு, திருவள்ளூர் எம்.பி. பி.வேணுகோபால், கும்மிடிப்பூண்டி எம்எல்ஏ கே.எஸ்.விஜயக்குமார், மாவட்டக் குழுத் தலைவர் பா.ரவிச்சந்திரன், மாவட்டக் குழு உறுப்பினர்கள் வெங்கட்ரமணா, டி.சந்திரன், ஒன்றியக்குழு தலைவர்கள் அம்மு மாதவன் (பூண்டி), அம்மினி மகேந்திரன் (எல்லாபுரம்)உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## சூரம்பட்டி அணையில் இருந்து வண்டல் மண் இலவசமாகப் பெற விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்

சூரம்பட்டி அணையில் இருந்து வண்டல் மண்ணை இலவசமாகப் பெற விரும்பும் விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என்று பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சூரம்பட்டி அணைக்கட்டுப் பகுதியில் உள்ள ஆக்கிரமிப்பு வீடுகளை அகற்றிவிட்டு அணையைத் தூர்வார வேண்டும் என விவசாயிகள் சங்கம் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் ஆக்கிரமிப்புகளை அகற்றிவிட்டு ஜூலை 15-ஆம் தேதிக்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று மாவட்ட நிர்வாகத்துக்கு உத்தரவிட்டது. இதைத்தொடர்ந்து, அணைக்கட்டுப் பகுதியில் ஆக்கிரமித்து கட்டப்பட்டிருந்த 123 வீடுகள் இடித்து அகற்றப்பட்டன. மேலும் பாசன வாய்க்கால் பகுதியில் ஆக்கிரமித்துக் கட்டப்பட்டிருந்த 560-க்கும் மேற்பட்ட வீடுகளும் ஏற்கெனவே அகற்றப்பட்டுள்ளன.

இந்நிலையில், அணையில் இருந்த மாசுபடிந்த நீர் ஏற்கெனவே வெளியேற்றப்பட்டுவிட்டது. அதைத்தொடர்ந்து, அணையில் தேங்கிக் கிடக்கும் வண்டல் மண்ணை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கும் அறிவிப்பு ஈரோடு மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டது.

இதையடுத்து, வண்டல் மண்ணை இலவசமாக வழங்குவதற்கான உத்தரவை மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர், கீழ்பவானி வடிநிலக் கோட்டப் பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் ராஜுவிடம் திங்கள்கிழமை வழங்கினார். கீழ்பவானி வடிநிலக் கோட்டத்தில் உள்ள அனைத்து உதவிப் பொறியாளர்களுகக்கும் இந்த உத்தரவு நகல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, விவசாயிகளுக்குத் தகவல் தெரிவிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து, பொதுப்பணித் துறை உயர் அதிகாரி கூறியதாவது:

சூரம்பட்டி அணைக்கட்டில் உள்ள வண்டல் மண்ணை விவசாயிகள் இலவசமாகப் பெறலாம். விவசாயிகள் தங்களது நிலத்துக்கான சிட்டா, அடங்கல் நகலுடன், கிராம நிர்வாக அலுவலரிடம் பெற்ற சான்றையும் இணைத்து ஈரோடு,

கோணவாய்க்காலில் உள்ள உதவிக் கோட்டப் பொறியாளர் ராதாகிருஷ்ணனிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பத் தேதியில் இருந்து இரு தினங்களுக்குள் மண் எடுக்க அனுமதி வழங்கப்படும். ஒரு விவசாயிக்கு டிராக்டரில் 4 லோடு வண்டல் மண் எடுக்க அனுமதி வழங்கப்படும். அவர்களின் தேவையைப் பொருத்து அதிகபட்சம் 5 லோடு வரை அனுமதிக்கப்படும் என்றார்.

## மானிய விலையில் தெளிப்பு நீர்ப் பாசன கருவிகள்

விவசாயிகளுக்கு மானிய விலையில் தெளிப்புநீர்ப் பாசனக் கருவிகள் வழங்கப்படும் என்று கோத்தகிரி தோட்டக்கலை உதவி இயக்குநர் சித்ராபானு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் திங்கள்கிழமை வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கோத்தகிரி வட்டாரத்தில் மத்திய அரசின் நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு தெளிப்பு நீர்ப் பாசனக் கருவிகள் வழங்கப்படவுள்ளன.

இதில், காய்கறிப் பயிர்கள் சாகுபடி செய்யும் சிறு, குறு விவசாயிகளுக்கு நூறு சதவீதம் மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியத்திலும் கருவிகள் வழங்கப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த விவசாயிகளுக்கு முன்னுரிமையும், முக்கியத்துவமும் தரப்படும். எனவே, இந்த வாய்ப்பை அனைத்து விவசாயிகளும் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## நீலகிரியில் மூன்றாவது நாளாகப் பரவலாக மழை: கேத்தியில் 54 மி.மீ. பதிவு

நீலகிரி மாவட்டத்தில் தொடர்ந்து மூன்றாவது நாளாக ஞாயிற்றுக்கிழமையும் பரவலாக மழை பெய்துள்ளது.

மாவட்டத்தில், தென்மேற்குப் பருவ மழை வலுத்துவரும் சூழலில், தொடர்ந்து மூன்றாவது நாளாகவும் மழை பெய்தது.

இதனால், பொதுமக்கள், விவசாயிகள் உள்ளிட்டோர் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பதிவான மழை விபரம் (மி.மீ.): கேத்தி-54, எமரால்டு-35, உதகை-17.3, நடுவட்டம்-16.4, கொடநாடு-12, குன்னூர்-8.5, கோத்தகிரி-6.5, தேவாலா மற்றும் குந்தா தலா 6, கிளன்மார்கன் மற்றும் கல்லட்டி தலா 4, கெத்தை-3, அவலாஞ்சி மற்றும் கூடலூர் தலா 2, கிண்ணக்கொரை-1 மி.மீ.

## அசோலா வளர்ப்பு, ஊறுகாய்ப் புல் தயாரிப்பு செயல் விளக்கம்

தருமபுரி மாவட்ட கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பில் அசோலா பாசி வளர்ப்பு மற்றும் ஊறுகாய்ப் புல் தயாரிப்பு குறித்த செயல் விளக்கப் பயிற்சிக் கூட்டம் தருமபுரி கால்நடைப் பராமரிப்பு பெருமருத்துவமனை வளாகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்தப் பயிற்சியில் பங்கேற்ற தருமபுரி ஒன்றியத்தைச் சேர்ந்த 59 பயனாளிகளுக்கு அசோலா பாசி, சைலேஜ் பை, மினரல் மிக்சர், கோ.எப்.எஸ். 29 விதைகள் ஆகியவற்றை மாவட்ட ஆட்சியர் கே. விவேகானந்தன் வழங்கினார். அப்போது அவர் கூறியது:

தருமபுரி மாவட்டத்திலுள்ள அனைத்து ஒன்றியங்களிலும் கால்நடை வளர்ப்போருக்கு அசோலா பாசி வளர்ப்பு மற்றும் ஊறுகாய்ப் புல் தயாரிக்கும் பயிற்சி நடத்தப்படவுள்ளது.

மாவட்டத்திலுள்ள 438 கால்நடை வளர்ப்போருக்கும் 100 சதவிகித மானியத்தில் ரூ. 6.4 லட்சத்தில் அசோலா பாசி வளர்ப்பதற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. அசோலா வழங்கப்படும் கால்நடைகளுக்கு பால் உற்பத்தி மற்றும் பாலின் தரமும் அதிகமாக இருப்பதுடன் கால்நடைகளின் ஆரோக்கியமும் மேம்படும்.

ஊறுகாய்ப்புல் தயாரிக்கும் திட்டத்தில் 420 பயனாளிகளுக்கு தலா ஒரு டன் கொள்ளளவு கொண்ட தலா 4 பைகள் மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன. வறட்சிக் காலங்களில் ஊறுகாய்ப் புல் கால்நடைகளுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்றார் விவேகானந்தன்.

பயிற்சியில், கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் டாக்டர் சீனிவாசன், துணை இயக்குநர் மகேஸ்வரன், உதவி இயக்குநர்கள் இளங்கோவன், சுப்பிரமணியன், சுகுமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்

## நாமகிரிப்பேட்டை ஏல மையத்தில் ரூ. 50 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம்

ராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் நாமகிரிப்பேட்டை ஏல மையத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஏலத்தில் ரூ. 50 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம்போனது.

இந்த மையத்தில் வாரந்தோரும் செவ்வாய்க்கிழமை மஞ்சள் ஏலம் நடைபெறுகிறது. இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் விரலி ரக மஞ்சள் 720 மூட்டை, உருண்டை ரக மஞ்சள் 280 மூட்டை, பனங்காளி 10 மூட்டை என மொத்தம் 1,010 மூட்டை மஞ்சள் விற்பனைக்கு வந்தது. இதில், விரலி ரகம் குறைந்தபட்சமாக ரூ. 9,009 முதல் அதிகபட்சமாக ரூ.10,690 வரை ஏலம் போனது. உருண்டை ரகம் குறைந்தபட்சம் ரூ. 7,009 முதல் அதிகபட்சமாக ரூ.8,969 -க்கு ஏலம் போனது. அதேபோல பனங்காளி ரகம் குறைந்தபட்சமாக ரூ.13,339 முதல் அதிகபட்சமாக ரூ.20,112-க்கு ஏலம் போனது. மொத்தம் ரூ. 50 லட்சத்துக்கு மஞ்சள் விலைபோனது.

## கெலவரப்பள்ளி அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு

தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவுப்படி, ஒசூர் கெலவரப்பள்ளி அணையில் இருந்து முதல்போக பாசனத்துக்காக தண்ணீரை அமைச்சர் பி.பாலகிருஷ்ணா ரெட்டி திறந்துவைத்தார்.

கெலவரப்பள்ளி அணையில் இருந்து வலது மற்றும் இடதுபுற பிரதான கால்வாய்களில் முதல்போக பாசனத்துக்காக 88 கன அடி தண்ணீர் செவ்வாய்க்கிழமை திறந்து விடப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் சி.கதிரவன் தலைமை வகித்தார்.

ஒசூர் சார் -ஆட்சியர் செந்தில்ராஜ், சட்டப்பேரவை உறுப்பினர்கள் மனோரஞ்சிதம் நாகராஜ், சி.வி.ராஜேந்திரன், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியக் தலைவர் தென்னரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் பி.பாலகிருஷ்ணா ரெட்டி முதல்போக பாசனத்துக்காக தண்ணீரை திறந்து வைத்தார்.

பின்னர் அமைச்சர் பி.பாலகிருஷ்ணாரெட்டி செய்தியாளர்களிடம் கூறியது:

தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவுப்படி, ஒசூர் கெலவரப்பள்ளி அணையில் இருந்து வலது மற்றும் இடதுபுற பிரதான கால்வாய் மற்றும் பிரிவு கால்வாய்களில் முதல்போக பாசனத்துக்காக ஜூலை 19-ஆம் தேதி முதல் முதல் டிசம்பர் 10-ஆம் தேதி வரை 145 நாள்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. கெலவரப்பள்ளி அணையின் இடதுபுற பிரதானக் கால்வாய் மற்றும் பிரிவு கால்வாய்கள் மூலம் 5 ஆயிரத்து 918 ஏக்கர், வலதுபுற கால்வாய் மூலம் 2 ஆயிரத்து 82 ஏக்கர் என மொத்தம் 8 ஆயிரம் ஏக்கர் புன்செய் நிலங்கள் பயனடைகின்றன.

இதன் மூலம் ஒசூர் தாலுகாவில் உள்ள தட்டகானப்பள்ளி, பூதிநத்தம், பெத்த முத்தாளி, முத்தாளி, அட்டூர், கதிரேப்பள்ளி, மாரசந்திரம், கொத்தூர், மோரனப்பள்ளி, தொரப்பள்ளி, திருச்சிப்பள்ளி, காமன்தொட்டி, தின்னூர், சுபகிரி, கோனேரிப்பள்ளி, சின்னகொல்லு, பெத்தகொல்லு, சாமனப்பள்ளி, சென்னத்தூர், அட்டகுறுக்கி, நல்லகானகொத்தப்பள்ளி, மருதாண்டப்பள்ளி ஆகிய 22 கிராமங்கள் பயன்பெறுகின்றன.

அதிக விளைச்சல்: அணையின் நீர் இருப்பு மற்றும் அணைக்கு நீர்வரத்து ஆகியவற்றை கருத்தில் கொண்டு 145 நாள்களுக்கு சுழற்சி முறையில் முதல் 10 நாளுக்கு தொடர்ந்து தண்ணீர் திறந்து விடப்படும். அடுத்த 5 நாள்கள் நிறுத்தியும் தண்ணீர் வழங்கப்படும். தண்ணீர் திறந்து விடப்படும் காலங்களில் இரு கால்வாய்களிலும் நொடிக்கு மொத்தம் 26 கன அடி வீதம், இடதுபுற பிரதான கால்வாயில் விடப்படும் நீரின் அளவு நொடிக்கு 62 கன அடி என்று மொத்தம் 88 கன அடி தண்ணீர் திறந்து விடப்படும்.

நிர்ணயிக்கப்பட்ட நாள்களுக்கு பிறகு எந்தக் காரணம் கொண்டு பாசனத்துக்கு கால நீட்டிப்பு செய்து தண்ணீர் வழங்கப்பட மாட்டாது. எனவே, விவசாயிகள் நீர் பங்கீட்டில் பொதுப்பணித் துறையினருடன் ஒத்துழைத்து நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி 2 மடங்கு உற்பத்தி, 3 மடங்கு வருமானம் என்ற குறிக்கோளுடன் அதிக விளைச்சல் பெற்று பயன் அடைய வேண்டும் என்றார்.

இதில் நகர்மன்றத் தலைவர்கள் ராமு, தங்கமுத்து, ஒன்றியக் குழுத் தலைவர் புஷ்பா சர்வேஷ், தர்மபுரி மாவட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவர் கே.நாராயணன், அதிமுக மாவட்டச் செயலர் கோவிந்தராஜ், முன்னாள் சூளகிரி ஊராட்சி ஒன்றியக்

குழுத் தலைவர் ஏ.வி.எம்.மது என்கிற ஹேம்நாத், மாவட்ட இளைஞர் பாசறை தலைவர் மாரேகவுடு, கூட்டுறவு வங்கித் தலைவர் நடராஜன், கவுன்சிலர்கள் வாசுதேவன், கெலவரப்பள்ளி அணை ஆயக்கட்டு தலைவர் பிரகாஷ், கெலவரப்பள்ளி ஊராட்சி மன்றத் தலைவர் பாலம்மா ராம்சந்திரப்பா, பாசன சங்கத் தலைவர்கள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## குறுவை தொகுப்புத் திட்டத்தில் ஜூலைக்குள் இலக்கை எட்ட அறிவுரை

தஞ்சாவூர் மாவட்டத்தில் குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தில் ஜூலை மாதத்துக்குள் இலக்கை எட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார் வேளாண்மை உற்பத்தி ஆணையரும், அரசுச் செயலருமான ககன்தீப் சிங் பேடி.

குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தின் கீழ், தஞ்சாவூர் அருகே மேலவெளி கிராமத்தில் இயந்திரம் மூலம் நெல் நடவு செய்வதற்கான நாற்றங்கால் தயாரிக்கும் பணி, களிமேடு கிராமத்தில் இயந்திர நடவுப் பணி உள்ளிட்டவற்றை அவர் செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்தார்.

மேலும், தென்னமநாடு கிராமத்தில் குறுவை சாகுபடி தொகுப்பு திட்டத்தின் கீழ் 100% மானியத்தில் வழங்கும் இடுபொருட்களான நெல் நுண்ணூட்டச் சத்து, துத்தநாக சல்பேட் வழங்கியது, உழவு, விதை மானியங்கள், குழாய்கள் ஆகியவை தொடர்பாக பயன்பெற்ற விவசாயிகளிடம் திட்டப் பயன்பாடு குறித்து கேட்டறிந்தார்.

இந்த மாத இறுதிக்குள் குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தின் கீழ், மாவட்ட இலக்கை முழுமையாக அடையவும், விவசாயிகளிடம் குறுவை தொகுப்பு திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும் வேளாண்மைத் துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

அப்போது, மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன், வேளாண்மை துறை இணை இயக்குநர் (பொ) சி. சீனிவாசன், கால்நடைத் துறை இணை இயக்குநர் (பொ) ராஜசேகரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## 268 விவசாயிகளுக்கு முழு மானிய விலையில் சிங் சல்பேட்

குறுவை தொகுப்புத் திட்டம் 2016 -இன் படி, மயிலாடுதுறை வட்டத்தைச் சேர்ந்த 268 விவசாயிகளுக்கு முழு மானிய விலையில் 3,000 கிலோ எடையுள்ள சிங் சல்பேட் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டது.

மயிலாடுதுறை வேளாண் விரிவாக்க மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டப்பேரவை உறுப்பினர் வீ. ராதாகிருஷ்ணன் பங்கேற்று பேசியது:

தமிழக முதல்வர் உத்தரவின்படி, பாய் நாற்றங்கால், தட்டு நற்றங்கால் அமைத்து இயந்திரம் மூலம் நடவு செய்ய ஏக்கருக்கு ரூ. 4,000 பின்னேற்பு மானியமும், முழு மானிய விலையில் நெல் நுண்ணூட்டம், களர் மற்றும் உவர் நிலத்தில் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் ஏக்கருக்கு ரூ. 400 மதிப்புள்ள 10 கிலோ சிங்சல்பேட் குறுவை தொகுப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

இதேபோல், முழு மானியத்தில் எச்டிபிஇ குழாய்கள் வழங்கப்படுகிறது என்றார். தொடர்ந்து, மயிலாடுதுறை வட்டம், மணக்குடி, அகரகீரங்குடி, குளிச்சாறு, செறுதியூர், மறையூர், சித்தர்க்காடு பகுதிகளைச் சேர்ந்த 268 விவசாயிகளுக்கு முழு மானிய விலையில் 3,000 கிலா சிங்சல்பேட்டை எம்எல்ஏ வழங்கினார்.

இதில் வேளாண் அலுவலர் ச. சுப்பையன், துணை வேளாண் அலுவலர் மு. பிரபாகரன், உதவி வேளாண்மை அலுவலர்கள் ஜி. ரஜினிகாந்த், செந்தில்குமார் மற்றும் வேளாண்துறை அதிகாரிகள், விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## 22இல் மீனவர் குறைதீர் கூட்டம்

குமரி மாவட்ட மீனவர்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை (ஜூலை 22) நடைபெறுகிறது.

ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்ட அரங்கில் முற்பகல் 11 மணிக்கு நடைபெறும் இக்கூட்டத்தில், மீன்வளத்துறை மற்றும் இதர அரசு துறைகளால் தீர்க்கப்பட வேண்டிய மீனவர்களின் குறைகள், கோரிக்கைகள், தேவைகள் அடங்கிய மனுக்களை நேரில் வழங்கலாம்.

பிற அரசுத் துறைகள் சார்ந்த கோரிக்கைகளை ஒரே மனுவில் கொடுக்காமல் துறைவாரியாக தனித்தனி மனுக்களாக வழங்கிட வேண்டும்.

22 ஆம் தேதி அன்று பெறப்படும் மனுக்கள் சம்பந்தப்பட்ட அரசுத்துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அதன் விவரம் அடுத்த மீனவர் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் தெரிவிக்கப்படும். இதில், மீனவர்கள் மற்றும் மீனவப் பிரதிநிதிகள் பங்கேற்கலாம் என்று மாவட்ட ஆட்சியர் சஜ்ஜன்சிங் ரா. சவாண் செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### காளான் வளர்ப்பு பயிற்சி: இளைஞர்களுக்கு அழைப்பு

ஈரோடு: கனரா வங்கி தொழில் பயிற்சி நிலையம் சார்பில், ஈரோடு அசோகபுரம், லட்சுமி தியேட்டர் அருகில், ஸ்ரீசரஸ்வதி வித்யாலயா சிறுவர் பள்ளி வளாகத்தில், காளான் வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி நடக்க உள்ளது. ஆக.,1 முதல், ஆறு நாட்களுக்கு பயிற்சி வழங்கப்பட உள்ளது. விவசாயிகள், இளைஞர்கள், பெண்கள், சுய உகவிக்குமுவினர் பங்கேற்கலாம். கமிமில் எமுக, படிக்க கெரிந்கிருக்க வேண்டும். வயது வரம்பு இல்லை. மதிய உணவு உட்பட அனைத்தும் இலவசம். வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கூடுதல் விவரம் அறிய, 0424-2290338 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## ஒரே ஏக்கரில் ஐந்து ஏக்கர் பலன் - விவசாயத்தில் சாதிக்கும் இன்ஜினியர்



விவசாய நிலங்களை பொறுத்தவரை நஞ்சை, புஞ்சை, மலைப்பிரதேசம், மானாவாரி என பருவநிலை மண் வளத்துக்கு ஏற்ப மாறுபடுகிறது. பசுமைக் குடில் தொழில் நுட்பத்தில் அனைத்து விவசாயத்தையும் செய்ய முடியும் என நிரூபித்து உள்ளார் திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டை சேர்ந்த குமரன், 32. சிவில் இன்ஜினியரிங் முடித்து விட்டு பசுமை குடில் விவசாயத்தில் 5 ஆண்டுகளாக சாதித்து வருகிறார். வயல் வெளியில் 5 ஏக்கரில் கிடைக்கும் மகசூலை இத்தொழில் நுட்பத்தில் ஒரு ஏக்கரில் பார்த்து விடுகிறார்.

### அனைத்து ரக விவசாயம்

பசுமை குடில் தொழில்நுட்பம் குறித்து குமரன் கூறியதாவது: பசுமைக் குடில் விவசாயத்தில் அனைத்து பருவ நிலையையும் கொண்டு வரலாம். மண்வளம், அதிக சூரிய ஒளி, குளிர், மழை, காற்று இவை எதுவும் அத்தியாவசியமில்லை. மண் வளம் இல்லாத இடங்களில் கூட தேங்காய் நார் அடைத்த பைகளில் பணப் பயிர், தோட்டப் பயிர், பூ சாகுபடி செய்யலாம். துளசி, தூதுவளை போன்ற மூலிகைகளும் பயிரிடலாம். இந்த முறையில் குறைந்த நீர்ப்பாசனம், இயற்கை உரத்துடன், பூச்சி, நோய் கிருமிகள் வராமல் தடுக்க முடியும். சிக்கனமான விவசாயம் செய்யும் நிலை தானாகவே உருவாகிறது.

### குடில் அமைப்பது எப்படி

இரும்பு பைப்புகள், இறக்குமதி செய்யப்பட்ட அல்ட்ரா வைலட் பிளாஸ்டிக் ஷீட்களை கொண்டு தேவையான அளவில் கூடாரம் அமைக்க வேண்டும்.

தோட்டத்தில் கிழக்கு, மேற்காக குடிலையும், வடக்கு, தெற்காக பாத்திகளையும் 'ஏரோ டைனமிக்' முறையில் அமைக்க வேண்டும். பக்கவாட்டிற்கு கொசுவலையை பயன்படுத்துவதன் மூலம் தேவையான காற்று, சூரிய ஒளி கிடைக்கும். இதனால் அதிக தட்ப, வெப்ப நிலையை கட்டுப்படுத்தலாம். குடிலின் உட்புறத்தில் நிழல் வலை (ஷேடோ நெட்), பாஹர், சொட்டு நீர், தெளிப்பானை பயன்படுத்தி சாகுபடி செய்ய வேண்டும்.

**சிறிய இடம் நிறைந்த பலன்**

குடிலின் உள்கட்டமைப்பால் பயிரில் சரியான ஈரப்பதத்துடன் ஒளிச்சேர்க்கை நடைபெறுகிறது. பூச்சி, நோய், எலி, பறவைகள் பாதிப்புகள் இல்லாமல், வயல் வெளியில் 5 ஏக்கரில் கிடைக்கும் மகசூலை குடிலுக்குள் ஒரே ஏக்கரில் பெற்று விடலாம். இக்குடிலை வீடுகள், சிறிய இடங்களிலும் அமைக்கலாம். வேளாண், தோட்டகலை துறை மூலம் குடிலுக்கான அரசு மானியம், விதைகள், தொழில் நுட்பங்கள் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

என்னுடைய நிலத்தில் வெள்ளரி, தக்காளியை ஆண்டு முழுவதும் பயிரிடுகிறேன். புனே, பெங்களூரு, குஜராத் ஆகிய இடங்களில் இத்தொழில் நுட்பத்திற்கு நல்ல வரவேற்பு உள்ளது. அப்பகுதி விவசாயிகள் இங்கு வந்து பயிற்சி பெற்று செல்கின்றனர். தேவைப்படும் விவசாயிகளுக்கு நாங்களே குறைந்த செலவில் குடில் அமைத்துக் கொடுக்கிறோம் என்றார். தொடர்புக்கு 93444 -77715.

**ஆண்டு முழுவதும் தக்காளி சாகுபடி**



தக்காளியை ஆண்டு முழுவதும் பயிர் செய்யலாம். நல்ல வடிகால் வசதி உள்ள வண்டல் மண் மிகவும் ஏற்றது. மண்ணில் கார அமில தன்மை 6.0 - 7.0 என்ற அளவில் இருக்க வேண்டும். வெப்பநிலை 21 முதல் 24 செ.கி., வரை இருப்பது வளர்ச்சிக்கு பெரிதும் உதவும். ஜுன் - ஜுலை, நவம்பர் - டிசம்பர், பிப்ரவரி - மார்ச் ஆகிய மாதங்கள் விதைக்கும் காலம். எக்டேருக்கு 350 முதல் 400 கிராம் விதைகள் தேவை.

**விதை நேர்த்தி:** ஒரு எக்டேருக்கு தேவையான விதைகளை 40 கிராம் 'அசோஸ்பைரில்லம்' கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். அதை ஒரு மீட்டர் அகலம் உள்ள மேட்டுப்பாத்திகளில் 10 செ.மீ., வரிசை இடைவெளியில் விதைக்க வேண்டும். பின் மணல் கொண்டு மூடி விட வேண்டும்.

**நிலம் தயாரித்தல்:** நிலத்தை நன்கு உழுது பண்படுத்த வேண்டும். பின் பார்கள் அமைத்து 25 நாள் வயதுள்ள நாற்றுக்களை பார்களின் ஒரு பக்கத்தில் நட வேண்டும். நடுவதற்கு முன் இரண்டு கிலோ அசோஸ்பைரில்லம் நுண்ணுயிர் கலவையை 20 கிலோ தொழு உரத்துடன் கலந்து இட வேண்டும்.

**தக்காளி ரகங்கள்:** கோ 1, கோ 2, மருதம் (கோ 3), பி.கே.எம். 1, பூசாரூபி, பையூர் 1, சி.ஒ.எல்.சி.ஆர்.எச். 3, அர்கா அப்ஜித், அர்கா அஹா, அர்கா அனான்யா ஆகிய ரகங்கள் உள்ளன. இவற்றை விகையின் ரகங்களுக்கு ஏற்ப குறிப்பிட்ட அளவு இடைவெளி விட்டு நடவு செய்ய வேண்டும்.

**நீர் நிர்வாகம்:** நாற்று நட்ட மூன்றாவது நாள் உயிர் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பின் மண்ணின் ஈரத்தன்மையை பொறுத்து வாரத்திற்கு ஒரு முறை அல்லது பத்து நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும்.

**ஊட்டச்சத்து மேலாண்மை:** அடியுரமாக எக்டேருக்கு தொழு உரம் 25 டன், தழைச்சத்து 75 கிலோ, மணிச்சத்து 100 கிலோ, சாம்பல் சத்து 50 கிலோ, போராக்ஸ் 10 கிலோ மற்றும் துத்தநாக சல்பேட் 50 கிலோ இட வேண்டும். நட்ட 30ம் நாள் தழைச்சத்து 75 கிலோ இட்டு மண் அணைக்க வேண்டும். நாற்று நட்ட 15ம் நாள் மற்றும் பூக்கும் தருணத்தில் 'டிரைகோன்டால்' 1 பி.பி.எம். என்ற அளவில் தெளிக்க வேண்டும். இதனால் மகசூல் அதிகரிக்கும்.

**பயிர் பாதுகாப்பு:** காய்ப்புழு, புரோடீனியா புழுவை கட்டுப்படுத்த இனக்கவர்ச்சி பொறி எக்டேருக்கு 12 எண்ணிக்கையில் அமைக்க வேண்டும். தாக்கப்பட்ட பழங்களில், வளர்ந்த புழுக்களை அழிக்க வேண்டும். 'டிரைகோகிரம்மா' என்னும் முட்டை ஒட்டுண்ணியை எக்டேருக்கு 50 ஆயிரம் என்ற அளவில் பூக்கும் தருணத்தில் பொருளாதார சேதநிலை அறிந்து விட வேண்டும். காய்ப்புழுவிற்கு என்.பி.வி. வைரஸ் கலவை தெளிக்க வேண்டும். புரோடீனியாப் புழுவிற்கு எக்டருக்கு கார்பரில் 1.25 கிலோ, நெல் தவிடு 12.5 கிலோ, வெல்லம் 1.25 கிலோ மற்றும் தண்ணீர் 7.5 லிட்டர் கலந்து விஷ உணவு தயாரித்து உபயோகப்படுத்த வேண்டும்.

'கார்போபியூரான்' குருணை மருந்தை ஒரு சதுர மீட்டருக்கு 10 கிராம் என்ற அளவில் விதைக்கும் போது இட வேண்டும். ஒரு லிட்டர் புளுகுளோரலின் மருந்தை 500 லிட்டர் நீரில் நன்றாக கலந்து நாற்று நடுவதற்கு முன் நிலத்தில் தெளித்து நீர்ப்பாய்ச்சி பின் நாற்றுக்களை நட வேண்டம். நாற்று நட்ட 30ம் நாள் ஒரு கைக்கிளை எடுக்க வேண்டும். விதை, நிலம் தயாரித்தல், நீர் நிர்வாகம், ஊட்டச்சத்து, களை கட்டுப்பாடு, பயிர் பாதுகாப்பு, நோய் தடுப்பு முறைகளை பின்பற்றினால் 135 நாட்களில் ஒரு எக்டேருக்கு 35 டன் பழங்கள் கிடைப்பது உறுதி.

**- பூபதி, துணை இயக்குனர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, மதுரை, 0452- 253 2351**

**வாழை**



வாழையில் சாம்பல் மற்றும் போரான் சத்து குறையை நிவர்த்தி செய்ய எளிய வழிமுறைகள் குறித்து ஸ்ரீவில்லிபுத்ரில் இயங்கும் பருத்தி ஆராய்ச்சி நிலையம் பயனுள்ள தகவல்களை வெளியிட்டுள்ளது.

**சாம்பல் சத்து பற்றாக்குறை அறிகுறிகள்**: முதிர்ந்த இலைகள், ஓரங்களில் இருந்து ஆரஞ்சு கலந்த மஞ்சள் நிறமாக மாறும். பின்னர் இலையின் ஓரங்கள் காய்ந்தும் உள்நோக்கி சுருண்டும் காணப்படும். இலையின் அளவும் சிறுத்து விடும். முற்றிய நிலையில் இலைகள் வெளி வராது மற்றும் பூ வருவதும் தாமதமாகும். வாழைப்பழத்தின் தரமும் குன்றிவிடும்.

**நிவர்த்திக்கு என்ன வழி:** 20 கிராம் பொட்டாசியம் குளோரைடை ஒரு லிட்டர் நீரில் கரைத்து இலை வழியாக 10 நாட்களுக்கு ஒருமுறை அறிகுறிகள் மறையும் வரை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**போரான் சத்து பற்றாக்குறை அறிகுறிகள்**: இளம் இலைகளில் சில நரம்புகள் பக்கம் பக்கமாக நெருக்கமாகவும், நரம்புக்கு இணையாக மஞ்சள் நிறப்புள்ளிகள் வளைந்து வளைந்து ஏணி போன்ற தோற்றத்தில் உருவாகும். இலைக்குருத்துக்கள் விரியாமல், இளம் இலைகள் கிழிந்து, பழுப்பு நிறமாக மாறும் பழங்களில் வெடிப்பு தோன்றும்.

**நிவர்த்திக்கு வழி உண்டு**: போரான் சத்து பற்றாக்குறை அறிகுறிகள் தென்பட்டதும் 100 லிட்டர் நீரில் 200 கிராம் போராக்ஸ் கலந்த கரை சலை, இலைகளின் மேல்

தெளித்து கட்டுப்படுத்தலாம். - பேராசிரியர் ம.குணசேகரன், பருத்தி ஆராய்ச்சி நிலையம், ஸ்ரீவில்லிபுத்தூர்.

## மானியத்தில் தெளிப்பு நீர் பாசன கருவிகள்

ஊட்டி: ஆதி திராவிட விவசாயிகளுக்கு, முழு மானியத்தில் தெளிப்பு நீர் பாசன கருவிகள் வழங்கப்பட உள்ளன.
ஊட்டி ரோஜா பூங்கா உதவி தோட்டக்கலை உதவி இயக்குனர் அறிக்கை:

நீலகிரி மாவட்டத்தில், தோட்டக்கலை துறையின் மூலம், ஒவ்வொரு ஆண்டும் நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ், சிறு, குறு விவசாயிகளுக்கு, 100 சதவீத மானியத்தில், தெளிப்பு நீர் பாசன கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நடப்பாண்டு, ஊட்டி வட்டாரத்தில் இத்திட்டத்தின் கீழ் அதிகளவில் ஆதிதிராவிட விவசாயிகள் பயன்பெறும் வகையில், 100 சதவீத மானியத்தில் தெளிப்பு நீர் பாசன கருவிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மானியம் பெற விரும்பும் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், தங்களது நில ஆவணங்கள் மற்றும் தாசில்தாரால் வழங்கப்பட்ட, சிறு, குறு விவசாயி என்பதற்கான சான்று ஆகியவற்றை, ஊட்டி வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தில் சமர்பிக்க வேண்டும். இவ்வாறு, அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## நெல் இயந்திர நடவிற்கு மானியம்

அவலூர்பேட்டை: மேல்மலையனூர் வட்டத்தில் நெல் இயந்திர நடவு சாகுபடி செய்யும் விவசாயிக்கு மானியம் வழங்கப்படும் என வேளாண் உதவி இயக்குனர் பெரியசாமி தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:
சாதாரண முறையில் நெல் சாகுபடியை விட இயந்திர முறை நெல் நடவில் சாகுபடி செய்வதால், இடு பொருள் செலவு மற்றும் சாகுபடி செலவு குறைகிறது.
தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் நெல் இயந்திர நடவு சாகுபடியை ஊக்கப்படுத்தும் வகையில் 50 சதவீதம் மானியமாக ஒரு எக்டேருக்கு 5000 ரூபாய் வழங்கப்படுகிறது.

விவசாயிகள் மானியத்தை பெற தங்கள் வயலில் இயந்திரம் மூலம் நடவு செய்யப்படும் புகைப்படம், சிட்டா, அடங்கல், ஆதார் எண் மற்றும் வங்கி கணக்கு எண் உள்ளிட்ட விவரங்களுடன், தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலர்களை தொடர்பு கொண்டு பயன் பெறலாம்.

## முருங்கைகாய் விலை சரிவு: சீசனால் வரத்து அதிகரிப்பு

கரூர்: முருங்கைகாய் சீசன் துவங்கியுள்ளதால், வரத்து அதிகரித்து, விலை சரிய துவங்கியுள்ளது.

கரூர் மாவட்டத்தில், அரவக்குறிச்சி வட்டாரத்தில் முருங்கை சாகுபடி அதிகளவில் நடக்கிறது. நடப்பாண்டு, வடகிழக்கு பருவமழை, கரூர் மாவட்டத்தில், எதிர்பார்த்த அளவில் பெய்ததால், மானாவரி நிலங்களில் முருங்கை சாகுபடியை விவசாயிகள் துவக்கினர். வழக்கமாக ஆண்டுதோறும், ஜூலை முதல், நவம்பர் வரை, முருங்கைகாய்க்கு சீசன் காலமாகும். இதனால், கரூர், அரவக்குறிச்சி, க.பரமத்தி மார்க்கெட்டுக்கு முருங்கைகாய் வரத்து, ஒரு வாரமாக அதிகரித்துள்ளதால், அதன்விலை சரிந்துள்ளது.

இதுகுறித்து, க.பரமத்தி முருங்கை வியாபாரி அருணாசலம் கூறியதாவது: செடி முருங்கை, மரம் முருங்கை, கொடி முருங்கை வகைகள் சாகுபடி செய்யப்படுகின்றன. இதில் செடி முருங்கை, கொடி முருங்கை இரண்டு அடி முதல், மூன்று அடி வரை வளரும். இந்த ரகங்கள் கடந்த ஜூனில், 25 முருங்கைகாய் கொண்ட ஒரு கட்டு, 100 ரூபாய் முதல், 150 ரூபாய் வரை, விற்பனையானது. ஆனால், தற்போது சீசன் துவங்கிவிட்டதால், வரத்து அதிகரித்து, ஒரு கட்டு, 50 ரூபாய் முதல், 75 ரூபாயாக குறைந்து விட்டது. மரம் முருங்கைகாய் ரகம் ஒரு கட்டு, 75 ரூபாயில் இருந்து, 50 ரூபாயாக குறைந்து விட்டது. இவ்வாறு அவர் கூறினார்.

## ஆடிப்பட்ட விதைப்புக்கு விவசாயிகள் தயார்

ஆண்டிபட்டி: ஆடிப்பட்ட விதைப்புக்கு ஆண்டிபட்டி பகுதி விவசாயிகள் தங்கள் நிலங்களை தயார்படுத்தி வருகின்றனர்.

ஆண்டிபட்டி பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் மானாவாரி, இறவை பாசன நிலங்கள் உள்ளன. தென்மேற்கு, வடகிழக்கு பருவமழையை மட்டுமே நம்பி உள்ள மானாவாரி நிலங்களில் சிறுதானியம், பயறு வகைகள்,எண்ணெய் வித்துக்கள் சாகுபடி செய்யப்படும்.

நீர் செழிப்பான இறவை பாசன நிலங்களில் நெல், கரும்பு, வாழை மற்றும் காய்கறிகள் சாகுபடி செய்யப்படுகிறது.
கடந்த சில மாதங்களாக வாட்டி வதைத்து வந்த கோடை வெயிலால் விவசாயிகள் பலரும் தங்கள் நிலங்களில் சாகுபடியை தவிர்த்து, உழவு செய்தும், இயற்கை உரங்களை இட்டும் நிலங்களுக்கு புத்துணர்வூட்டி வந்தனர்.
இந்நிலையில் தற்போது தென்மேற்கு பருவமழையால் ஆங்காங்கே சில இடங்களில் மட்டும் அவ்வப்போது மழை பெய்து வருகிறது. உழவு செய்த நிலங்களின் தன்மை மழையால் மாற்றம் பெற்று வருகிறது. இதனை சாதகமாக்கும் விவசாயிகள் சிலர் விதைப்புக்கான காலத்தை எதிர்நோக்கி உள்ளனர்.
அவர்கள் கூறியதாவது: ஆடியில் விதைப்பு செய்தபின் மழை கைகொடுத்தால் மூன்று மாதத்தில் பலன் கிடைத்து விடும். தொடர்ந்து கிடைக்கும் வடகிழக்கு பருவமழையால் இறவை பாசன விவசாயத்திற்கு பலன் கிடைக்கும்,என்றார்.

## விடிய, விடிய பெய்த மழையால் பருத்தி எடுக்கும் பணி பாதிப்பு

மல்லசமுத்திரம்: மல்லசமுத்திரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில்,நேற்று முன்தினம் பெய்த மழையின் காரணமாக, பருத்தி அறுவடை பணிகள் தடைபட்டன. மல்லசமுத்திரம் சுற்றுவட்டார பகுதிகளில், மார்ச் மாத துவக்கத்தில் பருத்தி விதை ஊன்றப்பட்டு, ஜூன் மாதத்தில் அறுவடையை துவக்கி விடுவர். இடைப்பட்ட காலங்களில் களை எடுத்தல், உரமிடுதல், தண்ணீர் பாய்ச்சுதல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் ஈடுபட்டு, காய்கள் நன்கு வெடித்த நிலையில், பருத்தியை அறுவடை செய்வர். தற்போது, பருத்தி எடுக்கும் பணி தீவிரமாக நடக்கிறது. இந்நிலையில், நேற்று முன்தினம் பெய்த மழையின் காரணமாக, வயல்வெளிகளில் தண்ணீர் தேங்கி நின்று, பருத்தி எடுக்க முடியாத நிலை உருவாகியுள்ளது. இதனால், விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

## பென்னாகரத்தில் அதிகபட்ச மழை

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், நேற்று முன்தினம் மழை பெய்தது. இதில் பென்னாகரம் பகுதியில் அதிகபட்சமாக, 56 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. மேலும், மாவட்டத்தில் அரூரில், 47.2, பாலக்கோட்டில், 37, தர்மபுரியில், 29, பாப்பிரெட்டிப்பட்டியில், 11, ஒகேனக்கல்லில், 9.6 மில்லிமீட்டர் மழையளவு பதிவானது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## மேட்டூர் நீர்மட்டம் 5 நாளில் 5 அடி உயர்வு



மேட்டூர் : காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பெய்து வரும் பருவ மழையால், கர்நாடக அணைகளிலிருந்து உபரி நீர் காவிரி ஆற்றில் வெளியேற்றப்பட்டது. இதனால் மேட்டூர் அணைக்கு நேற்று வினாடிக்கு 8,991 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 2 ஆயிரம் கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. அணையின் நீர்மட்டம் 52.80 அடியாக உள்ளது. கடந்த

14ம் தேதி 47.53 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், 5 நாட்களில் 5.27 அடி உயர்வடைந்துள்ளது.

## விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் 22 ல் விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டம்

விழுப்புரம், : விழுப்புரம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டம் வரும் 22ம் தேதி (வெள்ளிக்கிழமை) நடக்கிறது.விழுப்புரம் கலெக்டர் லட்சுமி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

விழுப்புரம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டம் வரும் 22 ம் தேதி (வெள்ளிக்கிழமை) நடக்கிறது. எனவே, மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் சங்க பிரதிநிதிகளும், விவசாயிகளும் வரும் 22-ம் தேதி அன்று நடக்க இருக்கும் விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டத்தில் கலந்து கொண்டு, தங்களது கோரிக்கைகளை மனுவாக அளித்து, பயனடைய வேண்டும் என்றார்.

## ராகி விதைப்பு பணி தீவிரம்

தேன்கனிக்கோட்டை : தேன்கனிக்கோட்டை சுற்றுவட்டார பகுதியில் கடந்த இரண்டு நாளாக தொடர்ந்து மாலை நேரத்தில் மழை பெய்து வருகின்றது. அதிகபட்சமாக அஞ்செட்டியில் 40 மி.மீ. மழையும், தளியில் 15மி.மீ, தேன்கனிக்கோட்டையில் 7 மி.மீ மழை பதி வானது. ஆடி மாதம் துவங்கிய நாள் முதலே தொடர்ந்து இரண்டு நாட்களாக நல்ல மழை பெய்து வருவதால் ராகி விதைக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

## வெண்டையில் காய்ப்புழுவை கட்டுப்படுத்த வழி என்ன? தோட்டக்கலைத்துறை ஆலோசனை

ராமநாதபுரம், : வெண்டைக்காயில் ஏற்படும் காய்ப்புழு நோய் தாக்குதலில் இருந்து தப்பிக்கும் வழிமுறைகள் குறித்து தோட்டக்கலை துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர். மாவட்டத்தின் சில இடங்களில் கத்தரிக்காய், வெண்டைக்காய், வெங்காயம், தக்காளி உள்ளிட்ட காய்கறிகள் அதிகளவில் பயிரிடப்படுகின்றன. தற்போது வெண்டைக்காய் அதிக அளவு பயிரிடப்பட்டுள்ளது. இக்காயில் தற்போது காய்ப்புழுத் தாக்குதல் ஏற்பட்டு, செடியிலேயே அழுகும் சூழ்நிலை

ஏற்பட்டுள்ளது.

இந்நோய் தாக்குதல் குறித்து தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கூறியதாவது, வெண்டையில் காய்ப்புழுத் தாக்குதல் ஆரம்ப கட்டமாக இருந்தால் என்டோசல்பான் அல்லது குளோரி பைரிபாஸ் 1 லிட்டர் தண்ணீருக்கு 2 மிலி அளவிலும், தாக்குதல் அதிகம் இருந்தால் டிசைடர் மருந்து 1 லிட்டருக்கு 1 மிலி கலந்து இரண்டு மூன்று நாட்களுக்கு தெளிக்க வேண்டும். தாக்குதல் புழுவின் பரிணாமம் முட்டை, புழு என பல்வேறு கட்டங்களாக இருப்பதால் லார்வின் மருந்தை 10 லிட்டர் நீருக்கு 20 கிராம் கலந்து தெளித்து வந்தால் இந்நோய் தாக்குதலில் இருந்து தப்பிக்கலாம் என்றனர்.